
## பதினைந்தாம் நிலை
## இயேசு உயிர்த்தெழுந்தார்.



முதல்: திவ்விய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றி கூறுகிறோம்.
பதில்: ஏனெனில் உமது திருச் சிலுவையைக் கொண்டு உலகத்தை மீட்டு இரட்ச்சித்தீர்

மாற்கு 16: 4-6

ஆனால் அவர்கள் நிமிர்ந்து உற்று நோக்கியபொழுது கல் புரட்டப்பட்டிருப்பதைக் கண்டார்கள். அது பெரியதொரு கல். பிறகு அவர்கள் கல்லறைக்குள் சென்றபோது வெண்தொங்கல் ஆடை அணிந்த இளைஞர் ஒருவர் வலப்புறம் அமர்ந்திருக்கக் கண்டு திகிலுற்றார்கள். அவர் அவர்களிடம், திகிலுற வேண்டாம், சிலுவையில் அறையப்பட்ட நாசரேத்து இயேசுவைத் தேடுகிறீர்கள், அவர் உயிருடன் எழுப்பப்பட்டார், அவர் இங்கே இல்லை, இதோ, அவரை வைத்த இடம். என்றார்.

செபம்:

என்னை விசுவசித்தவன் இறப்பிலும் வாழ்வான் என்னும் உமது வார்த்தை, உயிர்ப்பின் மேல் எமக்கு நம்பிக்கையை தருகிறது தந்தையே. அன்றாட வாழ்வில் நாம் பயணித்துவரும் சிலுவைப்பாதையில், மரணத்தை வென்ற உமது வெற்றியைப்போல், எமக்கும் வெற்றிகளை இறுதியில் ஈந்தருளும். உமது திருப்பாடுகள் எமது வாழ்கைக்கு பாடமாக அமையட்டும். காட்டிக் கொடுக்கப்பட்டதும், மறுதலிக்கப்பட்டதும், முள்முடி சூடியதும், கற்தூணில் கற்றுண்டு அடிபட்டதும், சிலுவை சுமந்ததும், அதனில் உயிர் பிரிந்ததும், நித்திய வாழ்வின் உயிர்ப்புக்காகத்தான் என, எமக்காக வாழ்ந்து காட்டிய,

திவ்விய இயேசுவே, உமக்கு எங்கள் நன்றிகள். ஆமேன்





# திருச்சிலுவைப்பாதை

வாருங்கள் சுமந்திடுவோம்.




திவ்விய இயேசுவே எங்கள் நேசத்துக்குரிய இரட்சகரே, அடியோர்கள் எங்களுக்காகவும் மரித்த விசுவாசிகளின் ஆத்துமங்களுக்காகவும் உமது திவ்விய இரக்கத்தை கேட்டு மன்றாடும்படி தாழ்ச்சி வணக்கத்துடனே உமது திருப்பாதத்தில் விழுந்துகிடக்கிறோம். உம்முடைய திருப்பாடுகளை தியானிக்கப் போகிற அடியோர்கள் எல்லோருக்கும் அளவில்லாப் பேறுபலன்களைத் தந்தருளும் சுவாமி. அழுகைப் பிரலாபத்துக்குரிய உமது திருச்சிலுவையின் பாதையை அனுசரிக்கையில் நாங்கள் முழுவதும் மனம் திரும்பி மெய்யான துக்க மனவேதனைப்பட்டு, இவ்வுலகத்தின் துன்பம் சோதனை அவமானங்களை மகிழ்வுடனே ஏற்றுக்கொள்ளும் படியாக அனுக்கிரகம் செய்தருளும்.

எங்கே சுமந்து போறீர்.. சிலுவையை நீர் எங்கே சுமந்து போறீர்
பொங்கும் பகைவராலே அங்கம் நடுநடுங்க எங்கே போறீர்.

## முதலாம் நிலை
## இயேசு தீர்வை இடப்படுகிறார்



முதல்: திவ்விய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றி கூறுகிறோம்.
பதில்: ஏனெனில் உமது திருச் சிலுவையைக் கொண்டு உலகத்தை மீட்டு இரட்ச்சித்தீர்

1பேதுரு 2:20-23

குற்றம் செய்ததற்காக நீங்கள் அடிக்கப்படும்போது பொறுமையோடு இருப்பதில் என்ன சிறப்பு? மாறாக, நன்மை செய்தும், அதற்காகப் பொறுமையோடு துன்புற்றால், அது கடவுளுக்கு உகந்ததாகும். கிறிஸ்துவும் உங்களுக்காகத் துன்புற்று ஒரு முன்மாதிரியை வைத்துச் சென்றுள்ளார். எனவே நீங்கள் அவருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றுங்கள். இதற்காகவே அழைக்கப்பட்டுள்ளீர்கள். வன்செயல் எதுவும் அவர் செய்ததில்லை; வஞ்சனை எதுவும் அவர் வாயில் இருந்ததில்லை. பழிக்கப்பட்டபோது பதிலுக்குப் பழிக்கவில்லை; துன்புறுத்தப்பட்டபோது அச்சுறுத்தவில்லை. நியாயமாகத் தீர்ப்பு வழங்குவோரிடம் தம்மை ஒப்படைத்தார்

செபம்:
மமதை பிடித்த மதத்தலைவர்களும் ஆட்சிபீட அதிகாரிகளும், குற்றமற்றவனை குற்றவாளியாக மரணத்திற்கு தீர்வையிடுகிறார்கள். நீதி கேட்ட இறைமகனுக்கு மரணத்தீர்ப்பு, அநியாயத்தை எதிர்த்தவருக்கு சிலுவை மரணம். அனைத்தையும் மௌனத்துடன் ஏற்கிறார். அபிப்பிராய பேதங்களில், நிற்பந்தசூழ்நிலைகளில், நான் விரும்பாத வழிகளில், இறைமகன் யேசு போல் மௌனம் காத்துள்ளேனா? பொறுமை காக்கும் நற்பண்பை எனக்களித்திடும் இறைவா

முதல்: எங்கள் பேரில் தயவாய் இரும் சுவாமி, எங்கள் பேரில் தயவாய் இரும்
பதில்: விசுவாசிகளின் ஆத்துமங்கள் சர்வேசுரனுடைய இரக்கத்தினால் சமாதானத்தில் இளைப்பாறக் கடவன.

பாடல்:

மனித பாவத்தாலே மரணத்தீர்வைப் பெற்று
தூய செம்மறி போலே துக்கத்துடன் வருந்தி எங்கே போறீர்

## பதிநான்காம் நிலை
## இயேசு கல்லறையில் அடக்கம் செய்யப்படுகிறார்



முதல்: திவ்விய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றி கூறுகிறோம்.
பதில்: ஏனெனில் உமது திருச் சிலுவையைக் கொண்டு உலகத்தை மீட்டு இரட்ச்சித்தீர்

நற்செய்தி : மாற்கு 15
அரிமத்தியா ஊரைச் சேர்ந்த யோசேப்பு என்பவர் துணிவுடன் பிலாத்திடம் போய் இயேசுவின் உடலைக் கேட்டார். அவர் மதிப்புக்குரிய தலைமைச் சங்க உறுப்பினர். அவரும் இறையாட்சியின் வருகைக்காகக் காத்திருந்தவர். ஏற்கெனவே இயேசு இறந்துவிட்டதைக் குறித்துப் பிலாத்து வியப்படைந்து, நூற்றுவர் தலைவரை அழைத்து, அவன் இதற்குள் இறந்து விட்டானா? என்று கேட்டான். நூற்றுவர் தலைவரிடமிருந்து கேட்டு அறிந்ததும், உடலை அவன் யோசேப்பிடம் அளித்தான். யோசேப்பு மெல்லிய துணி ஒன்றை வாங்கி வந்து, இயேசுவின் உடலை இறக்கித் துணியால் சுற்றிப் பாறையில் வெட்டப்பட்டிருந்த கல்லறையில் கொண்டு வைத்தார், அதன் வாயிலில் ஒரு கல்லை உருட்டி வைத்தார்.

செபம்:
பிறப்பிற்கும் இறப்பிற்கும் இடையில் நிகழும் நிகழ்ச்சியே வாழ்வு. அவ் வாழ்விற்கு அர்த்தம் தந்தவர் நம் ஆண்டவர் யேசு. நானே உலகின் ஒளி, என்னை பின்பற்றுபவன் இருளில் நடவான். வாழ்வின் ஒளியைக் கொண்டிருப்பான். அந்த வாழ்வின் ஒளியைக்காண இத்தவக்காலத்தில் நாம் எம்முள் சென்று எம்மையே அறிய, ஆத்மசோதனை செய்திட உதவிடும் இறைவா.

முதல்: எங்கள் பேரில் தயவாய் இரும் சுவாமி, எங்கள் பேரில் தயவாய் இரும்

பதில்: விசுவாசிகளின் ஆத்துமங்கள் சர்வேசுரனுடைய இரக்கத்தினால் சமாதானத்தில் இளைப்பாறக் கடவன.

பாடல்:

கர்த்தனே நின் உடலைக் கல்லறைக்குள்ளடக்க
உத்தானம் ஜீவனுமாய் உயிருடன் எழுந்து காட்சி தந்தீர்.

## பதின்முன்றாம் நிலை
## இயேசு சிலுவையிலிருந்து இறக்கப்படுகிறார்.



முதல்: திவ்விய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றி கூறுகிறோம்.
பதில்: ஏனெனில் உமது திருச் சிலுவையைக் கொண்டு உலகத்தை மீட்டு இரட்ச்சித்தீர்

யோவான் 19: 26,27

இயேசு தம் தாயையும் அருகில் நின்ற தம் அன்புச் சீடரையும் கண்டு தம் தாயிடம், அம்மா, இவரே உம் மகன் என்றார். பின்னர் தம் சீடரிடம், இவரே உம் தாய் என்றார். அந்நேரமுதல் அச்சீடர் அவரைத் தம் வீட்டில் ஏற்று ஆதரவு அளித்து வந்தார்.

செபம்:

தாய் முன் மகன் இறப்பது கொடுமையிலும் கொடுமை.
அச்சொல்லொணாக்கொடுமையை அனுபவித்தாள் தாய்மரியாள். உன் உள்ளத்தை வாள் ஊடுருவும் என்ற சிமியோனின் வார்த்தை நிறைவேறிற்று. எம் வாழ்க்கை சோதனையாலும் வேதனைகளாலும் சோதிக்கப்படும் பொழுது அன்னையின்யின் அன்பையும் அரவணைபபைப்யும் நாம் உணர்ந்திட அருள்புரியும்.

முதல்: எங்கள் பேரில் தயவாய் இரும் சுவாமி, எங்கள் பேரில் தயவாய் இரும்

பதில்: விசுவாசிகளின் ஆத்துமங்கள் சர்வேசுரனுடைய இரக்கத்தினால் சமாதானத்தில் இளைப்பாறக் கடவன.

பாடல்:

உமது மடிமீதில் மரித்த மகன் தாங்கி
ஏழு சோக வாட்களால் ஊடுருவி வருந்தித் தாயே நின்றீர்

## இரண்டாம் நிலை
## இயேசு சிலுவை சுமக்கிறார்



முதல்: திவ்விய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றி கூறுகிறோம்.
பதில்: ஏனெனில் உமது திருச் சிலுவையைக் கொண்டு உலகத்தை மீட்டு இரட்ச்சித்தீர்

1 பேதுரு 2:1-4
ஆண்டவர் எத்துணை இனியவர் என்பதை நீங்கள் சுவைத்திருந்தால், எல்லா வகையான தீமையையும் வஞ்சகத்தையும் வெளிவேடம், பொறாமை, அவதூறு ஆகிய யாவற்றையும் அகற்றுங்கள்; புதிதாய்ப் பிறந்த குழந்தைகள்போல, வஞ்சகமற்ற வார்த்தையாகிய பாலை அருந்த ஆர்வமுள்ளவர்களாயிருங்கள். இதை அருந்துவதால் நீங்கள் மீட்பில் வளருவீர்கள். உயிருள்ள கல்லாகிய அவரை அணுகுங்கள். மனிதரால் உதறித் தள்ளப்பட்டதாயினும் கடவுளால் தெரிந்து கொள்ளப்பட்ட உயர்மதிப்புள்ள கல் அதுவே.

செபம்:

தலையில் முள்முடி, உடல் முழுவதும் ஆறாப்புண்கள், கசையடி, முகத்தில் உமிழ்நீர், எட்டுப்பேர் சுமக்கின்ற சிலுவையை தான் ஒருவரே சுமக்கின்றார். அனைத்தையும் வாய்முடி மௌனியாக ஏற்றுக்கொள்கிறார். என்னவோர் மனத்தைரியம், என்ன மனபலம். நிலையான உறுதியான நம்பிக்கை. இறைவா! சோதனைகள் என் வாழ்வில் வந்து முட்டி மோதி அலைக்களிக்கும் போது மனோபலத்தை எனக்கருளும்.

முதல்: எங்கள் பேரில் தயவாய் இரும் சுவாமி, எங்கள் பேரில் தயவாய் இரும்

பதில்: விசுவாசிகளின் ஆத்துமங்கள் சர்வேசுரனுடைய இரக்கத்தினால் சமாதானத்தில் இளைப்பாறக் கடவன.

பாடல்:

பாரச்சிலுவையை நீர் பாசத்துடன் அணைத்து
பாவத்தின் சுமை தாங்கி ஆர்வத்துடன் நடந்து எங்கே போறீர்.

## மூன்றாம் நிலை
## இயேசு முதல்முறை வீழ்கிறார்



முதல்: திவ்விய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றி கூறுகிறோம்.
பதில்: ஏனெனில் உமது திருச் சிலுவையைக் கொண்டு உலகத்தை மீட்டு இரட்ச்சித்தீர்

1பேதுரு 2:6-8
ஏனெனில், "இதோ, சீயோனில் நான் ஒரு மூலைக்கல் நாட்டுகிறேன். அது தேர்ந்தெடுக்கப்பட்ட, விலையுயர்ந்த மூலைக்கல். அதில் நம்பிக்கை கொண்டோர் பதற்றமடையார்" என்று மறைநூலில் காணக்கிடக்கிறது. நம்பிக்கை கொண்ட உங்களுக்கு அது உயர்மதிப்புள்ளதாக விளங்கும். நம்பிக்கை இல்லாதவர்களைப் பொறுத்தமட்டில், "கட்டுவோர் புறக்கணித்த கல்லே முதன்மையான மூலைக்கல்லாயிற்று." மற்றும் அது, "இடறுதற் கல்லாகவும் தடுக்கி விழச்செய்யும் கற்பாறையாகவும்" இருக்கும். அவர்கள் வார்த்தையை ஏற்காததால் தடுக்கி விழுகிறார்கள்; இதற்கென்றே அவர்கள் குறிக்கப்பட்டிருக்கிறார்கள்.

செபம்:
பாரத்தின் சுமை தாங்க உடல் மறுக்கிறது. உடல் சுமையும், மனச்சுமையும் ஒருங்கே சேர தாங்க முடியாது விழுகின்றார். அவரும் மனிதனல்லவா.. வீழ்ந்தவர் வீழ்ந்துவிடவில்லை, மீண்டும் எழுகின்றார், உறுதியுடன் எழும்புகின்றார், இலக்கை நோக்கிச் செல்கின்றார். துன்பதுயரங்கள் அலைபோல் வந்து அமிழ்த்த நேரும் போதெல்லாம், அதனுள் மூழ்கிவிடாது மீண்டும் எழ அருள் தாரும் இறைவா.

முதல்: எங்கள் பேரில் தயவாய் இரும் சுவாமி, எங்கள் பேரில் தயவாய் இரும்

பதில்: விசுவாசிகளின் ஆத்துமங்கள் சர்வேசுரனுடைய இரக்கத்தினால் சமாதானத்தில் இளைப்பாறக் கடவன.

பாடல்:

கல்வாரி மலை நாடி தள்ளாடித் தரை வீழுந்து
எல்லோரின் பாவங்களைத் தனிமையாய்ச் சுமந்து எங்கே போறீர்.

## பனிரெண்டாம் நிலை
## இயேசு உயிர் துறக்கிறார்.



முதல்: திவ்விய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றி கூறுகிறோம்.
பதில்: ஏனெனில் உமது திருச் சிலுவையைக் கொண்டு உலகத்தை மீட்டு இரட்ச்சித்தீர்

யோவான் 19:28-30

இதன்பின், அனைத்தும் நிறைவேறிவிட்டது என்பதை அறிந்த இயேசு, தாகமாய் இருக்கிறது என்றார். மறைநூலில் எழுதியுள்ளது நிறைவேறவே இவ்வாறு சொன்னார். அங்கே ஒரு பாத்திரம் நிறையப்புளித்த திராட்சை இரசம் இருந்தது. அதில் கடற்பஞ்சை நன்கு தோய்த்து ஈசோப்புத் தண்டில் பொருத்தி அதை அவர்கள் அவரது வாயில் வைத்தார்கள்.அந்த இரசத்தைக் குடித்ததும் இயேசு, எல்லாம் நிறைவேறிற்று என்று கூறித் தலை சாய்த்து ஆவியை ஒப்படைத்தார்.

செபம்:

துன்பச் சிலுவையில் தொங்கிய யேசு அன்புடனே ஒரு அருள்மொழி சொன்னார்
எல்லாம் முடிந்தது என மனம் நிறைந்தார்
எங்கு துன்பம் உள்ளதோ, எங்கு துயரம் உள்ளதோ
அங்கு விரைந்து சென்று உதவி, மனநிறைவடைய அருள்தாரும்.

முதல்: எங்கள் பேரில் தயவாய் இரும் சுவாமி, எங்கள் பேரில் தயவாய் இரும்

பதில்: விசுவாசிகளின் ஆத்துமங்கள் சர்வேசுரனுடைய இரக்கத்தினால் சமாதானத்தில் இளைப்பாறக் கடவன.

பாடல்:

சிலுவைப் பீடமேறி மும்மணி நேரம் தொங்கி
நேய பிதாவை வேண்டி ஆருயிர் ஒப்படைத்துப் பலியானீர்.

## பதினொராம் நிலை
## இயேசு சிலுவையில் அறையப்படுகிறார்



முதல்: திவ்விய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றி கூறுகிறோம்.
பதில்: ஏனெனில் உமது திருச் சிலுவையைக் கொண்டு உலகத்தை மீட்டு இரட்ச்சித்தீர்

நற்செய்தி : யோவான் 19: 17-19
இயேசு சிலுவையைத் தாமே சுமந்துகொண்டு ' மண்டை ஓட்டு இடம் ' என்னுமிடத்திற்குச் சென்றார். அதற்கு எபிரேய மொழியில் கொல்கொதா என்பது பெயர். அங்கே அவர்கள் இயேசுவையும் அவரோடு வேறு இருவரையும் சிலுவைகளில் அறைந்தார்கள்: அவ்விருவரையும் இரு பக்கங்களிலும் இயேசுவை நடுவிலுமாக அறைந்தார்கள். பிலாத்து குற்ற அறிக்கை ஒன்று எழுதி அதைச் சிலுவையின் மீது வைத்தான். அதில் ' நாசரேத்து இயேசு யூதர்களின் அரசன் ' என்று எழுதியிருந்தது.

செபம்:
ஆசிர் அளித்த கரங்கள், தொட்டு குணமாக்கிய கரங்கள், மன்னித்த கரங்கள்,அரவணைத்த கரங்கள் அந்தோ அவற்றிற்கு கிடைத்த பரிசு கூர்மையான ஆணிகள். ஊரெல்லாம் உறவிற்காக அலைந்து திரிந்த பாதங்கள், பாவிகளைத்தேடிய பாதங்கள்,கடலையும் கரையையும் நாடிய பாதங்கள் அந்தோ அவற்றிற்கு கிடைத்த பரிசு கூர்மையான ஆணிகள். உம்மை வாழ்த்திப் போற்றிய கூட்டங்கள் தூற்றியதும், அநியாயத்தை தட்டிக்கேட்காததும் ஏனோ? நீதியின் பால் பசியுள்ளோர் பேறுபெற்றோர்,அவர்கள் நிறைவு பெறுவர் என்ற உம் வார்த்தையை உணர்ந்தவர்களாக நீதிக்காக உறுதியுடன் போராடும் வல்லமை தந்தருள்வாய்.

முதல்: எங்கள் பேரில் தயவாய் இரும் சுவாமி, எங்கள் பேரில் தயவாய் இரும்
பதில்: விசுவாசிகளின் ஆத்துமங்கள் சர்வேசுரனுடைய இரக்கத்தினால் சமாதானத்தில் இளைப்பாறக் கடவன.
பாடல்:
நீட்டிய கைகால்களில் நீண்ட இரும்பாணிகள்
நிஷ்டூரமாய் அறைய நேசத்தால் வெந்து பலியானீர்.

## நான்காம் நிலை
## இயேசு தம் தாயாரை சந்திக்கிறார்



முதல்: திவ்விய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றி கூறுகிறோம்.
பதில்: ஏனெனில் உமது திருச் சிலுவையைக் கொண்டு உலகத்தை மீட்டு இரட்ச்சித்தீர்

மாற்கு 3:31-34
அப்பொழுது அவருடைய தாயும் சகோதரர்களும் வந்து வெளியே நின்று கொண்டு அவரை வரச் சொல்லி ஆள் அனுப்பினார்கள். அவரைச் சூழ்ந்து மக்கள் கூட்டம் அமர்ந்திருந்தது. "அதோ, உம் தாயும் சகோதரர்களும் சகோதரிகளும் வெளியே நின்று கொண்டு உம்மைத் தேடுகிறார்கள்" என்று அவரிடம் சொன்னார்கள். அவர் அவர்களைப் பார்த்து, "என் தாயும் என் சகோதரர்களும் யார்? என்று கேட்டு, தம்மை சூழ்ந்து அமர்ந்திருப்பவர்களைச் சுற்றிலும் பார்த்து, "இதோ என் தாயும் என் சகோதரர்களும் இவர்களே. கடவுளின் திருவுளத்தை நிறைவேற்றுபவரே என் சகோதரரும் சகோதரியும் தாயும் ஆவார்" என்றார்.

செபம்
மானிடத்திற்கு மீட்பு அளிக்க வந்தவருக்கு அவமானச்சின்னம். என்றும் ஒளிவீசும் கண்கள் இருண்டு கிடந்தது. முலர்ந்த முகம் வாடி வதங்கி காட்சி அளித்தது. இக் கோலத்தில் தன் மகனை சந்திக்கிறாள் மரியன்னை. வேதனை தாங்க முடியாமல் துவண்டு போகின்றாள். மகனுக்கு உதவமுடியாமல் தவிக்கிறாள். இறைவா மற்றவர்களுக்கு உதவ சந்தற்பங்கங்கள் கிடைக்கும் போதெல்லாம், உதவிடும் நல்மனத்தை தந்திடும்.

முதல்: எங்கள் பேரில் தயவாய் இரும் சுவாமி, எங்கள் பேரில் தயவாய் இரும்
பதில்: விசுவாசிகளின் ஆத்துமங்கள் சர்வேசுரனுடைய இரக்கத்தினால் சமாதானத்தில் இளைப்பாறக் கடவன.
பாடல்:
மாமரி கன்னி அன்னை மகனின் கோலம் கண்டு
மாதுயருடன் வாடி மனம் நொந்து வருந்த எங்கே போறீர்

## ஐந்தாம் நிலை
## இயேசுவுக்கு சிமியோன் உதவுகிறார்



முதல்: திவ்விய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றி கூறுகிறோம்.
பதில்: ஏனெனில் உமது திருச் சிலுவையைக் கொண்டு உலகத்தை மீட்டு இரட்ச்சித்தீர்

லூக்காஸ் 14:25-30
பெருந்திரளான மக்கள் இயேசுவோடு சென்றுகொண்டிருந்தனர். அவர் திரும்பிப் பார்த்து அவர்களிடம் கூறியது; "என்னிடம் வருபவர் தம் தந்தை, தாய், மனைவி, பிள்ளைகள், சகோதரர் சகோதரிகள் ஆகியோரையும், ஏன், தம் உயிரையுமே என்னைவிட மேலாகக் கருதினால், அவர் என் சீடராயிருக்க முடியாது. தம் சிலுவையைச் சுமக்காமல் என் பின் வருபவர் எனக்குச் சீடராய் இருக்கமுடியாது. "உங்களுள் யாராவது ஒருவர் கோபுரம் கட்ட விரும்பினால், முதலில் உட்கார்ந்து, அதைக் கட்டிமுடிக்க ஆகும் செலவைக் கணித்து, அதற்கான பொருள் வசதி தம்மிடம் இருக்கிறதா எனப் பார்க்கமாட்டாரா? இல்லாவிட்டால் அதற்கு அடித்தளமிட்ட பிறகு அவர் கட்டி முடிக்க இயலாமல் இருப்பதைப் பார்க்கும் யாவரும் ஏளனமாக, "இம்மனிதன் கட்டத் தொடங்கினான்; ஆனால் முடிக்க இயலவில்லை" என்பார்களே! கேட்க செவியுள்ளவர்கள், கேட்கட்டும் என்றார்.

செபம்:
நன்மை பெற்ற சனக்கும்பல், நன்றே புகழ்ந்த சனக்கும்பல், ஊரே கூடி வாழ்க வாழ்க என்று வாழ்த்திய இறைமகனை கூடி நின்று வேடிக்கை பார்த்தது. தொலைவில் நின்ற சீமோன் தன் தோளில் யேசுவின் சுமை தாங்க முன்வருகிறார். ஆதரவற்ற, ஆறுதல் தேடி நிற்கதியாகநிற்கும் என் சகோதரனுக்கு உதவிட நல்லுள்ளத்தை தந்திடும் இறைவா


முதல்: எங்கள் பேரில் தயவாய் இரும் சுவாமி, எங்கள் பேரில் தயவாய் இரும்

பதில்: விசுவாசிகளின் ஆத்துமங்கள் சர்வேசுரனுடைய இரக்கத்தினால் சமாதானத்தில் இளைப்பாறக் கடவன.

பாடல்:

உதிரம் ஆறாய் சிந்தி உள்ள வீரமிழந்து
சீரோன் சீமோன் துணையை ஏற்று வழி நடந்து எங்கே போறீர்

## பத்தாம் நிலை
## இயேசுவின் ஆடைகள் களையப்படுகின்றன



முதல்: திவ்விய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றி கூறுகிறோம்.
பதில்: ஏனெனில் உமது திருச் சிலுவையைக் கொண்டு உலகத்தை மீட்டு இரட்ச்சித்தீர்

லூக்காஸ்: 19:23-24
இயேசுவைச் சிலுவையில் அறைந்தபின் படைவீரர் அவருடைய மேலாடைகளை நான்கு பாகமாகப் பிரித்து ஆளுக்கு ஒரு பாகம் எடுத்தக் கொண்டார்கள். அங்கியையும் அவர்களே எடுத்துக்கொண்டனர். அந்த அங்கி மேலிருந்து கீழ்வரை தையலே இல்லாமல் நெய்யப்பட்டிருந்தது. எனவே அவர்கள் ஒருவரை ஒருவர் நோக்கி, ''அதைக் கிழிக்க வேண்டாம். அது யாருக்குக் கிடைக்கும் என்று பார்க்கச் சீட்டுக் குலுக்கிப் போடுவோம்.'' என்றார்கள். ''என் ஆடைகளைத் தங்களுக்குள் பகிர்ந்து என் உடைமீது சீட்டுப் போட்டார்கள்.'' என்னும் மறைநூல் வாக்கு இவ்வாறு நிறைவேறியது.

செபம்:
கூடியிருந்த மக்கள் முன்னிலையில் ஆடைகளையப்படுகின்றது. என்ன அவமானம், மானபங்கப்பட்டு, கூனிக்குறுகி நிற்கும் காட்சி. ஒட்டி உடம்போடு உலர்ந்துபோன ஆடையை இழுத்துக் கழட்டும் பொழுது மீண்டும் காயங்கள் திறக்கப்பட்டு அதனால் நீர் பட்ட வேதனை. அனைத்தையும் மௌனித்து எனக்காக என் பாவங்களுக்காக ஏற்றீரே யேசுவே.

முதல்: எங்கள் பேரில் தயவாய் இரும் சுவாமி, எங்கள் பேரில் தயவாய் இரும்

பதில்: விசுவாசிகளின் ஆத்துமங்கள் சர்வேசுரனுடைய இரக்கத்தினால் சமாதானத்தில் இளைப்பாறக் கடவன.

பாடல்:
நீட்டாடை கழற்றவே கோடிக் காயங்களாலே
இரத்தம் ஆறாய் பெருக வேதனையால் வருந்தி துயா நின்றீர்.

## ஒன்பதாம் நிலை
## இயேசு மூன்றாம் முறை விழுகிறார்



முதல்: திவ்விய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றி கூறுகிறோம்.

பதில்: ஏனெனில் உமது திருச் சிலுவையைக் கொண்டு உலகத்தை மீட்டு இரட்ச்சித்தீர்

லூக்கா 13:34-35

“எருசலேமே, எருசலேமே, இறைவாக்கினரைக் கொல்லும் நகரே, உன்னிடம் அனுப்பப்பட்டோரைக் கல்லால் எறிகிறாயே. கோழி தன் குஞ்சுகளைத் தன் இறக்கைக்குள் கூட்டிச் சேர்ப்பதுபோல நானும் உன் மக்களை அரவணைத்துக் கொள்ள எத்தனையோ முறை விரும்பினேன். உனக்கு விருப்பமில்லையே. இதோ உங்கள் இறை இல்லம் கைவிடப்படும். ஆண்டவர் பெயரால் வருபவர் ஆசி பெற்றவர். என நீங்கள் கூறும் நாள் வரும்வரை என்னைக் காணமாட்டீர்கள் என நான் உங்களுக்குச் சொல்கிறேன்.

செபம்:

நேரம் நெருங்குகிறது. முடிவை அண்மித்துவிட்டார. ஆம் கபாலமலையுச்சி தெரிகிறது. கொடிய ஆட்சியாளர்களாலும், கொடிய போர்வீரர்களாலும் தாம் இறக்கப் போகின்ற காட்சியை ஒரு கணம் எண்ணிப்பார்க்கின்றார். எம் இடைவிடாத பாவஅக்கிரமங்களை நினைந்து வேதனை தாங்க முடியாமல் முகம் குப்பிற விழுகின்றார். ஆனாலும் மீண்டும் எழுந்து இலக்கை நோக்கிப் பயணிக்கிறார். மன்னிப்பின் இறைவா. என் எண்ணம், சொல், செயலால் எனக்கோ பிறருக்கோ துன்பம் கொடுக்காத வாழ்வு வாழ்ந்திட அருள் தாரும்.

முதல்: எங்கள் பேரில் தயவாய் இரும் சுவாமி, எங்கள் பேரில் தயவாய் இரும்

பதில்: விசுவாசிகளின் ஆத்துமங்கள் சர்வேசுரனுடைய இரக்கத்தினால் சமாதானத்தில் இளைப்பாறக் கடவன.

பாடல்:

தூர வழிச் சிலுவை தாங்கப் பெலமுமின்றி
மூன்றாம் முறை தரையில் முகம் படிந்தெழுந்தும் எங்கே போறீர்.

## ஆறாம் நிலை
## இயேசுவின் முகத்தை வெரோணிக்கா துடைக்கிறாள்



முதல்: திவ்விய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றி கூறுகிறோம்.

பதில்: ஏனெனில் உமது திருச் சிலுவையைக் கொண்டு உலகத்தை மீட்டு இரட்ச்சித்தீர்

லூக்கா 7:44-47

பின்பு அப்பெண்ணின் பக்கம் அவர் திரும்பி, சீமோனிடம், ”இவரைப் பார்த்தீரா? நான் உம்முடைய வீட்டிற்குள் வந்தபோது நீர் என் காலடிகளைக் கழுவத் தண்ணீர் தரவில்லை, இவரோ தம் கண்ணீரால் என் காலடிகளை நனைத்து அவற்றைத் தமது கூந்தலால் துடைத்தார். நீர் எனக்கு முத்தம் கொடுக்கவில்லை, இவரோ நான் உள்ளே வந்தது முதல் என் காலடிகளை ஓயாமல் முத்தமிட்டுக்கொண்டே இருக்கிறார். நீர் எனது தலையில் எண்ணை பூசவில்லை, இவரோ என் காலடிகளில் நறுமணத் தைலம் பூசினார். ஆகவே நான் உமக்குச் சொல்கிறேன், இவர் செய்த பல பாவங்கள் மன்னிக்கப்பட்டன. ஏனெனில் இவர் மிகுதியாக அன்பு கூர்ந்தார். குறைவாக மன்னிப்புப் பெறுவோர் குறைவாக அன்பு செலுத்துவோர் ஆவர்’’ என்றார்.

செபம்:

இரத்தம் தோய்ந்த முகம், வேர்த்துக்களைத்த முகம். அம் முகத்தை துடைக்க வருகிறாள் ஓர் வீரப்பெண். கூக்குரலிடும் கூட்டத்தை அவள் பொருட்படுத்தவில்லை, சுற்றி நின்ற போர்வீரர்களுக்கும் அவள் அஞ்சவில்லை. உறுதியான நம்பிக்கையுடன் மண்ணை மீட்க வந்தவரின் திருமுகம்தனைத் துடைக்கின்றாள். ஆழ்ந்த நம்பிக்கை, அசைக்கமுடியாத நம்பிக்கை எம் உள்ளத்தை வலுப்படுத்த உதவிடும் இறைவா.

முதல்: எங்கள் பேரில் தயவாய் இரும் சுவாமி, எங்கள் பேரில் தயவாய் இரும்

பதில்: விசுவாசிகளின் ஆத்துமங்கள் சர்வேசுரனுடைய இரக்கத்தினால் சமாதானத்தில் இளைப்பாறக் கடவன.

பாடல்:

கர்த்தனே உம் வதனம் இரத்தக்கறையாய் மங்கி உத்தமி வெரோணிக்கா
வெண்துகிலால் துடைத்தும் எங்கே போறீர்.

## ஏழாம் நிலை
## இயேசு இரண்டாம் முறை தரையில் விழுகிறார்



முதல்: திவ்விய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றி கூறுகிறோம்.
பதில்: ஏனெனில் உமது திருச் சிலுவையைக் கொண்டு உலகத்தை மீட்டு இரட்ச்சித்தீர்

1பேதுரு 3:14-17
நீதியின்பொருட்டுத் துன்புற வேண்டியிருப்பினும் நீங்கள் பேறு பெற்றவர்களே. யாருக்கும் நீங்கள் அஞ்சி நடுங்கவோ மனங்கலங்கவோ வேண்டாம். உங்கள் உள்ளத்தில் கிறிஸ்துவை ஆண்டவராகக் கொண்டு அவரைத் தூயவரெனப் போற்றுங்கள். நீங்கள் எதிர்நோக்கி இருப்பதைக் குறித்து யாராவது விளக்கம் கேட்டால் விடையளிக்க நீங்கள் எப்பொழுதும் ஆயத்தமாய் இருங்கள். ஆனால், பணிவோடும் மரியாதையோடும் விடை அளியுங்கள். உங்கள் மனச்சான்றும் குற்றமற்றதாயிருக்கட்டும். அப்பொழுது உங்கள் கிறிஸ்தவ நன்னடத்தையைப் பழிக்கிறவர்கள் உங்களை இழிவாகப் பேசியதைக் குறித்து வெட்கப்படுவார்கள். ஏனெனில், தீமை செய்து துன்புறுவதை விட, கடவுளுக்குத் திருவுளமானால், நன்மை செய்து துன்புறுவதே மேல்.

செபம்:
மனிதர்களின் பாவத்தின் மொத்த சுமையே பாரச்சிலுவை. அச்சுமை தாங்க முடியாமல் மீண்டும் வீழ்கிறார். மக்களை மீட்க வந்தேன் என்ற இலக்கு மீண்டும் அவரை எழவைக்கிறது. இலக்கை நோக்கிப் பயணிக்கிறார். அநீதிகள், அக்கிரமங்கள், அநியாயங்கள், வன்முறைகள் என்று பாவப்பட்டியல்கள் இன்றும் தொடர்கின்றன. பாவிகள் மனம் மாறிட அருள்புரியும் இறைவா.

முதல்: எங்கள் பேரில் தயவாய் இரும் சுவாமி, எங்கள் பேரில் தயவாய் இரும்

பதில்: விசுவாசிகளின் ஆத்துமங்கள் சர்வேசுரனுடைய இரக்கத்தினால் சமாதானத்தில் இளைப்பாறக் கடவன.
பாடல்:

பாவங்கள் ஒன்றாய் சேர்ந்த பாரச்சுமையினாலே
மீண்டும் தரையில் வீழ்ந்தும் வீரத்துடன் எழுந்து எங்கே போறீர்.

## எட்டாம் நிலை
## இயேசு அழுகின்ற பெண்களுக்கு ஆறுதல் கூறுகிறார்



முதல்: திவ்விய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றி கூறுகிறோம்.
பதில்: ஏனெனில் உமது திருச் சிலுவையைக் கொண்டு உலகத்தை மீட்டு இரட்ச்சித்தீர்

லூக்கா 23: 27-29, 31

பெருந்திரளான மக்களும் அவருக்காக மாரடித்துப் புலம்பி ஒப்பாரி வைத்த பெண்களும் அவர் பின்னே சென்றார்கள். இயேசு அப்பெண்கள் பக்கம் திரும்பி, ”எருசலேம் மகளிரே, நீங்கள் எனக்காக அழவேண்டாம், மாறாக உங்களுக்காகவும் உங்கள் மக்களுக்காகவும் அழுங்கள். ஏனெனில் இதோ, ஒரு காலம் வரும். அப்போது மலடிகள் பேறுபெற்றோர் என்றும், பிள்ளை பெறாதோரும் பால் கொடாதோரும் பேறு பெற்றோர் என்றும் சொல்வார்கள். பச்சை மரத்துக்கே இவ்வாறு செய்கிறார்கள் என்றால் பட்டமரத்துக்கு என்னதான் செய்யமாட்டார்கள்.”

செபம்:
ஊர் ஊராக சென்று உடல் நோயாளிகளையும், மன நோயாளிகளையும் சுகப்படுத்தி, ஆறுதல் அளித்த தேவமகனின் நிலைகண்ட பெண்கள் கூட்டமொன்று புலம்பி அழுகிறார்கள். உடல் சோர்ந்து, மனம் துர்கித்து நின்றாலும் பெண்களுக்கு ஆறுதல் கூறுகிறார். வரப்போகும் சந்ததிகள் அனுபவிக்க இருக்கும் துன்பங்களுக்காக துயருறுங்கள் என்றார். அன்பான இறைவா! என் ஆறுதல், எனது கவலைகள் என்று குறுகிய உள்ளத்துடன் வாழாது என் சகோதரனுக்கு ஆறதலாக இருந்திட அருள்தாரும்.

முதல்: எங்கள் பேரில் தயவாய் இரும் சுவாமி, எங்கள் பேரில் தயவாய் இரும்
பதில்: விசுவாசிகளின் ஆத்துமங்கள் சர்வேசுரனுடைய இரக்கத்தினால் சமாதானத்தில் இளைப்பாறக் கடவன.
பாடல்:
புண்ணிய பெண்மணிகள் புலம்பி அழும்வேளை
தேற்றுதல் கூறி நீரும் நேசக் கண்ணீர் சொரிந்து எங்கே போறீர்.